பாடம் 9

# எல்லா மக்களுக்காகவும்

***மிகவும் புகழ்வாய்ந்த போதகரோ, பாடகரோ உன் வீட்டிற்கு விருந்துக்கு வருவதாக இருந்தால் உனக்கு எப்படியிருக்கும்? தேவாதி தேவனே இஸ்ரவேலர் நடுவில் தங்க வந்ததைக் குறித்துப் பார்ப்போமா?***

தேவனுடைய ஆலயம் மிகமிகச் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது. சாலொமோன் ராஜா இஸ்ரவேலின் மூப்பர், இஸ்ரவேலரின் தலைவர்கள் யாவரையும் எருசலேமுக்கு வரும்படிச் செய்தார். ஏனெனில், ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்ய வேண்டியிருந்தது.

எனவே, முதல் வேலையாக, மூன்றுமாத காலமாக ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்த கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை ராஜா செய்தார். ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மிகுந்த மகிழ்ச்சியோடும், மரியாதையோடும் மிகுந்த கவனத்தோடும் சுமந்து வந்தார்கள். ராஜாவும் இஸ்ரவேலர் சபை முழுவதும் பெட்டிக்கு முன்னே நடந்து வழிநெடுகிலும் எண்ண முடியாதபடி திரளான ஆடுகளையும் மாடுகளையும் தேவனுக்குப் பலியிட்டார்கள். லேவியரும் மற்ற ஆசாரியர்களும் மோசேயின் காலத்தில் தேவனுடைய கூடாரத்திலிருந்த யாவையும் பக்தியோடே சுமந்துவந்தார்கள். 120 ஆசாரியர்கள் இனிமையாகவும், உயர்ந்த தொனியிலும் இசைக் கருவிகளைக் கொண்டு இசை இசைத்தார்கள். தேவனை நன்றியோடு துதித்து, “கர்த்தர் நல்லவர்; அவருடைய உண்மை, அன்பு என்றென்றைக்குமுள்ளது!” என்று போற்றிப் பாடினார்கள். ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில் ஒரு மகிமையான காரியம் நடந்தது.

மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.



**மனன வசனம்**

**எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்.**

**வெளிப்படுத்தல் 15:4.**

தேவனுடைய மகிமை ஆலயத்தை நிரப்பினதால் ஆசாரியர்கள் உள்ளே நிற்க முடியவில்லை. இந்தக் காட்சி யைக் கண்டு சாலொமோன் மகிழ்ந்தார். ஆம்! ஆலய வேலை முடிந்த மாத்திரத்தில், தேவன் தாம் சொன்னபடியே ஆலயத்தினுள் வந்து வாசம் பண்ண வந்துவிட்டார். ‘‘இஸ்ர வேலின் தேவனாகிய கர்த்த ருக்கு ஸ்தோத்திரம்’’என ராஜா உரத்தசத்தமாய்க் கூறினார்.

பின்,ராஜாமுழங்காலில் நின்று தன்னுடைய கைகளை வானத்தை நோக்கி விரித்தார்; ஜெபிக்க ஆரம்பித்தார். ‘‘இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக உத்தமமாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக் கையையும் கிருபையையும் காத்து வருகிறீர்.

இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக. நானும், உமது ஜனமாகிய இஸ்ரவேலும் ஜெபிக்கும் போது அந்த ஜெபத்தைக் கேட்டருளும்.

ஒருவேளை உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாகப் பாவம் செய்து சிறைப்படக்கூடும். அவ்வாறு சிறைப்பட்டாலும், தங்கள் தவறை உணர்ந்து, தங்கள் பாவத்தை அறிக்கையிடக்கூடும். அப்படி அவர்கள் இந்த ஆலயத்துக்கு நேரே உம்மை நோக்கி ஜெபித்தால், தேவரீர் அவர்கள் ஜெபத்தைக் கேளும். அவர்களை மன்னியும்; மறுபடியும் எருசலேமுக்கு அழைத்து வாரும். உமக்கு விரோதமாக அவர்கள் செய்த பாவத்தை மன்னியும்’’ என்று ஊக்கமாக ஜெபித்தார்.



## செய்தி

**என் உலகளாவிய சபைக்குடும்பத்துடன்
நான் தேவனைத் தொழுகிறேன்.**

மக்களின் பாவத்தினால், மழை பெய்யாது இருந்தால், மன்னித்து உமது பாதையில் நடத்தும், அவர்களுக்குப் போதனை செய்யும். நாடு மேலும் மேலும் செழிக்கும்படி, நல்ல மழையைக் கொடுத்தருளும். நீர் வல்லமையாய் எகிப்திலிருந்து மீட்டு வந்த உம் மக்கள்மேல் கிருபையாயிரும்'' என்று அருமையாக ஜெபித்தார்.

சாலொமோன் தம் ஜெபத்தின் முடிவில், இஸ்ரவேலரிடம், ''தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள உங்கள் இதயம் எப்போதும் தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது'' என்றார்.

என் அன்பே! நீயும் கர்த்தரோடு இணைந்திரு; அவரை விட்டு விலகாதே.

***செய்முறை:*** **தேவன் சொல்லியபடி தேவாலயத்தை சாலொமோன் கட்டினார். ஆலயப் பிரதிஷ்டையின்போது நிகழ்ந்த நிகழ்வுகள் இங்கே படங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. படத்தின் கீழே முறைப்படி எண்ணை எழுதி நிகழ்வுகளை வரிசைப்படுத்து.**

# புதிர் 9



___



___



___



___